செ. வெ. எண் :- 209 நாள் :- 19-03-2012

# செய்தி வெளியீடு

## 38வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2012 நிறைவு விழா

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, 38வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னைத் தீவுத்திடலில் சுற்றுலாத் துறையின் சார்பாக இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பொருட்காட்சி 3–1–2012 அன்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி S. கோகுல இந்திரா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பொருட்காட்சியில் 30 அரசுத் துறைகளும், 10 அரசு சார்ந்த நிறுவனங்களும் மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம், மத்திய ரிசர்வ் வங்கி போன்ற 5 பிற அரங்குகளுமாக, மொத்தம் 45 அரங்குகள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. மேலும், அறிவியல், தொழில் நுட்பம், கைத்தறி, இமாச்சலப்பிரதேசம் மற்றும் புதுச்சேரி கைத்திறன், அறிவியல் தொழில்நுட்ப அரங்குகளும் இடம்பெற்றிருந்தன.

முதல் 5 நாட்கள் இலவசமாக பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது. 71 நாட்கள் சிறப்பாக நடைபெற்று இன்று (19.03.2012) நிறைவுபெறவுள்ளது. இந்த நிறைவு விழாவில் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று தலைமையுரை ஆற்றினார்கள். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் முன்னிலையுரை ஆற்றினார்கள். சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் (ம) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. வி. கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் விழாச் சிறப்புரையும், சுற்றுலாத் துறையின் ஆணையர் (ம) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையும் ஆற்றினார்கள்.

இப்பொருட்காட்சியை 08.01.2012 முதல் 18.03.2012 வரை ஆகிய 71 நாட்களில் 6,94,393 பெரியவர்களும், 1,64,735 சிறியவர்களும், ஆக மொத்தமாக 8,59,128 பேர் கண்டு களித்துள்ளனர். இதன் மூலம் ரூ.1,20,63,245 நுழைவுக் கட்டண வருவாயாக அரசுக்கு கிடைத்துள்ளது. இப்பொருட்காட்சியை 2 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியர்கள் சலுகைக் கட்டணத்தில் கண்டு களித்தனர். இப்பொருட்காட்சி நடைபெற்ற 71 தினங்களிலும் மாலை வேளையில் பரத நாட்டியம், நாடகம், பல்சுவைக் கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடத்தப்பட்டன.

நாள்தோறும் பொருட்காட்சியைக் காண வருகை தரும் பொது மக்களுக்கு, நுழைவுச் சீட்டின் மூலம் குலுக்கல் முறையில் சூட்கேஸ், குக்கர், அயர்ன் பாக்ஸ் போன்ற பரிசுகள் நாள்தோறும் மூன்று நபர்களுக்கு வழங்கப்பட்டன.

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக, சென்னை நகரின் முக்கியப் பகுதிகளிலிருந்து கூடுதலாக அரசுப் பேருந்துகள் சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

மொத்தம் 71 நாட்கள் நடைபெற்ற இப்பொருட்காட்சியின் மூலம் ரூ.470.94 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இதில் செலவினம் ரூ.217.58 இலட்சம் போக, ரூ.253.36 இலட்சம் நிகர இலாபம் கிடைத்துள்ளது. இதில் 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சியில் நிகர வருவாயாக கிடைத்த ரூ.206 இலட்சத்தை விட இந்த ஆண்டில் ரூ.47.36 இலட்சம் கூடுதலாக நிகர இலாபம் கிடைத்துள்ளது. இது சென்ற ஆண்டைவிட 22 விழுக்காடு அதிகமாகும்.

இச்சுற்றுலா நிறைவு விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் திரு. நா. பாலகங்கா அவர்கள், துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பழ கருப்பையா அவர்கள், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் திருமதி. சரஸ்வதி ரங்கசாமி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. பா. பெஞ்சமின் அவர்கள், சென்னை மாநகராட்சி 5வது மண்டலக் குழுத் தலைவர் திரு. இரா. பழனி அவர்கள், சென்னை மாநகராட்சியின் 59வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. என். நாகமணி அவர்கள், சென்னை மாநகராட்சியின் 60வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எச். சீமா பசீர் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

2/2.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9